பிஸ்மில்லாஹி

# பரப்பிர்மப் பதிகம்

30 APR192

இது

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

சோதுகுடி

ஸ்ரீமான் - எம். கே. எம்.

**அப்துல் காதிறு ராவுத்தர்**

**சாஹிப் பஹாதூர்**

அவர்களால் இயற்றியது.

---

வெளியீடு:

பஞ்சசக்தி புத்தகசாலை

நெ. 40, 28-வது வீதி,

தபால் பெட்டி நெ. 1051

இரங்கோன்.

1926 [இதன் விலை அணா 2.

Q7:417
N26
184402

30 APR 1926

# INTRODUCTION.

---

The work *"Para Brahma Pathikam"* is one of the 96 kinds of poetical productions in Tamil. It is a poem of ten stanzas. The peculiarity that characterises these stanzas is that they are full of thoughts and imaginations and the author Mr. M. K. M. Abdul Kadir Sahib, the Special Magistrate of Ilayangudi, has most wonderfully, nay, most enviably, succeeded in composing the said work for the benefit of his fellow creatures who are interested in Tamil Literature. As the author has secured very valuable certificates from many of the eminent scholars in Tamil Literature, I need scarcely say that he has expressed his noble sentiments in noble language.

I hope that the public will be very proud of this small work which is eminently useful.

Paramakudi }
1903. }

K. S. NARASIMMACHARI,
*Deputy Tahsildar and*
*Sub-Magistrate.*

"*Para Brahma Pathikam*" is the title of the short poem composed by Mr. M. K. M. Abdul Khadir Ravuther of Sodugudi, Special Magistrate of Ilayungudi. The simple and flowing style, the beauty of expression and the liberal and noble sentiments adopted by the author can never fail to create a favourable impression in the minds of Tamil scholars and it is a matter for congratulation that our Tamil land has an ardent lover of Tamil in the author, a young Mahomedan under-graduate of culture and position and of sweet and amiable temper. I wish him all succes in his poetical attempt.

15th Dec. 1903,
Madura.

S. SWAMINATHA AIYAR,
*Teacher, S. H. School, Madura,*
*& Late Secretary,*
*Madura Tamil Sangam.*

184602
600 008

# சிறப்புப்பாயிரம்

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த மங்கலம் ஆந்திரதிராவிட
சமஸ்கிருத வித்வான் பிரும்மஸ்ரீ
இராயலு ஐயங்கார் அவர்கள் குமாரரும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானுமாகிய
பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவாசையங்காரவர்க ளியற்றியது.

வெண்பா.

எத்திக்கு மார்கவிஞ ரேத்த வமுதமெனத்
தித்திக்கும் வண்டமிழிற் செப்பினன்—முத்திக்
கதிகமகா சாதனமே யானபரப் பிர்மப்
பதிகமப்துல் காதிறபூ பன்.

184402

---

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்
சோழவந்தான் மகா-ள-ள-ஸ்ரீ,
அ. சண்முகம்பிள்ளை அவர்கள் இயற்றியது

வெண்பா.

மூப்பூக் குலவுபுகழ் மொய்த்தபரப் பிர்மத்திற்
கற்பூக்கு மோர்பதிக மாக்கினன்—கற்பகமுஞ்
சங்கோசங் கொள்கொடையு தாரனப்துல் காதிறிதற்
கெங்கோச மாணங்காண் பேம்.

நாகூர் வித்வஜனசேகரரும் மதுரைத் தமிழ்ச்சங்க

வித்வானுமாகிய மகா-ா-ா-ஸ்ரீ

## குலாம்காதிறு நாவலரவர்களியற்றியது

வெண்பா.

சோதுகுடி வாழுமப் துல்கா திறுகவிஞன்
பாதுகுடி கொண்ட பரப்பிர்ம—மீது
பதிகமொன்று பாடினன் பாரி லெவர்தாம்
அதிகமவன் போற்கற் றவர்.

---

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்வானும், விவேகபாநு

பத்திராதிபருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ

## எம். ஆர். கந்தசாமிக் கவிராயர் அவர்கள்

இயற்றியவை.

ஆசிரிய விருத்தம்.

திருமருவு சோதுகுடி நகரில்வந்து
செல்வமுட னீகைநலஞ் சிறந்துநாளுங்
கருணைமிகு மனமுடைய கலிங்கிமீரு
கனிநாமன் செயுந்தவத்தாற் கவினத்தோன்றிப்
பெருமைதரு மாங்கிலமுந் தமிழுங்கற்றுப்
பிரசங்க வலிபடைத்துப் பெரியோர்பக்கம்
ஒருமையுளத் தன்பருமை வேண்டுதோறு
முபகரித்தன் முதற்பலவு முற்றமேலோன். (க)

எவ்வுயிரு மிடுக்கணுரு தின்பமேவி
    யிருப்பதுவே வேண்டுமென வெண்ணிவாழ்வோ
னௌவியத்தாற் கலகமிட்டோ ரெவராணு
    மவரவர்க்குத் தக்கதண்ட மாற்றியன்னூர்
செவ்வையுறப் புரிநீதி யதிகாரத்தாற்
    சிறப்புற்ருேன் கவிஞர்பலர் சினேகங்கொண்டோ
னவ்விவிழி மடவியர்க்கு மதனன் போல்வா
    னற்கவிதை பலவியற்றி நனிசீருற்ருேன். (உ)

கரப்புமொழி புகலாத நாவான்அப்துல்
    காதிறுநா வலன்றனது கல்விமாண்பாற்
பரப்பிர்மப் பதிகமொன்று புகன்ருன்வாங்கிப்
    படித்துமனம் பூரித்தேம் பலருமீது
தாப்பெரிது மகிழ்வடைவ ரெனவச்சிட்டுத்
    தந்தனனூற் சிவகங்கைத் தலத்துவக்கீல்
வரப்பெரிய னெழிற்சீனி முருகமேலோன்
    மாநிலமெல் லாங்கீர்த்தி மல்கமாதோ. (ௗ)

---

திருவாவடுதுறை யாதீன மகாவித்வான் திரிசிரபுரம்
ஸ்ரீமீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணுக்காாகிய சோடச
அவதானம் மகா-ா-ா-ஸ்ரீ.
கலியாணசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றியது.

வெண்பா.

கம்பன்ருன் சொன்னு காளமே கப்புலவன்
நம்படிக்கா சுத்தா னவின்ருனு—கும்பமுனி
சொன்னுனு சோதுகுடித் தூயனப்துல் காதிறுரை
பொன்பரப்பிர் மப்பதிகம் போல்.

மானாமதுரை சப் ரிஜிஸ்டிரார் மகா-ள-ள-ஸ்ரீ

## பார்த்தசாரதி நாயுடு அவர்களியற்றியது.

நேரிசைவெண்பா.

ஆரணங்க ளோது மரியபரப் பிர்மமேற்
பூரணமா வோர்பதிகம் போற்றினன்—யாரெனிலோ
சோதுகுடி நன்னகரப் துல்காதி றென்றகலே
மாதுகுடி கொண்டருளு மன்.

---

சிவகங்கை மகா-ள-ள-ஸ்ரீ

## முஹம்மதிஸ்மால் பாவலரவர்களியற்றியது.

ஆசிரியவிருத்தம்.

அடிதோறுங் கட்டாய்க் கற்பனையாய்மிக்க
வலங்கார மாயமுதா யருமையாகப்
படிமீதிற் பரப்பிர்மப் பதிகங்கேட்ட
பாவலர்க்கா னந்தமுறப் பகர்ந்தான்பண்பாய்த்
துடியிடைத் தோகையராடுஞ் சுனைகள்சூழுஞ்
சோதுகுடித் தீன்குலத்தி லுதித்ததூயோன்
கடிகமழு மலர்ப்புயத்தான் கலிங்கிமீரு
கனிசுத னப்துல்காதிர் கலைவல்லோனே.

## திருச்செங்கோடு முத்தமிழ் வித்துவான் மகா-௱-௱-ஸ்ரீ,
## சே. கு. விசாகப்பெருமாள் முதலியாரவர்கள்

### இயற்றியவை.

காவளஞ்சே ரிரங்கோனி லானரெரி மாஜிஸ்திரேட்
கண்ய வான்பூ
மாவளஞ்சேர் மால்மதுரைப் பிள்ளைமகிழ் சமுகவித்து
வான்ப்ர சங்க
நாவளஞ்சேர் செந்தமிழ்நா வலன்செய்யப் பப்பெரியன்
நவிலக் கற்ற
பாவளஞ்சேர் மாணவரிற் சிறப்புடையோன் ஆங்கிலமும்
பயின்றவல் லோன். (௧)

அன்னவயற் சோதுகுடி யணிநகரி லவதரித்தோ
னன்பான் மிக்கோன்
கன்னன்மணி தருமிளையான் குடியதனி லீதியதி
கார தீரன்
சொன்னமொழி தவறுதோன் மடவியர்கண் மடலெழுது
சமுக னென்றற்
பன்னமுடி யாப்புகழோ னப்துல்காதி றுவென்னும்
பாவல் லோன்றன். (௨)

மனத்திருக்குந் தேவவிசு வாசமூல னினர்பலரும்
மருவ வேண்டி
அனைத்துயிர்க்கும் இறையாகும் பரப்பிர்மத் துதிப்பதிக
மறைந்தான் கற்றோர்
இனத்திருக்கும் எல்லவரு மினிப்பதிகம் பெற்றேமென்
றிசைப்பா ரோர்பா
னினைத்திருக்கு மவர்வீடு பெறுவரிதன் பெருமையென்னல்
நிகழ்த்தற் பாற்றே. (௩)

## சிவகங்கை ஸ்ரீபஞ்சாக்ஷரம்பிள்ளையவர்கள் குமாரர்
## மகா-௱-௱-ஸ்ரீ கணபதியா பிள்ளையவர்கள்
## இயற்றியது.

கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீர்மருவச்சிறைச் சிகிகண்சேர்க்குஞ் சீதச்செழுமலர்ப் பூம்பொ
ழிலுகுக்குந்தேன்காறேக்கக்
கூர்மருவப்பல் வளங்கிண்குலாவுஞ் சோதுகுடியிற்றீன் குலத்துதி
த்தகோமானுனுந் .
கார்மருவுங்கரதலனற்கிலுங்கி மீருன் கனிதவத்திற்கனிந்
துதித்தகருணைக்காதல்
பார்மருவப் பரப்பிர்மப் பதிகம்பண்பாய்ப் பகர்ந்தனனப்
துல்காதர்பாவல்லோனே.

முற்றிற்று

பிஸ்மில்லாஹிர்ரகுமானிர்ரகீம்.

# பரப்பிர்மப்பதிகம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

சீர்பூக்கு மானந்த சித்துபரப் பிர்மநின்மேற்
பேர்பூக்கு மோர்பதிகம் பேசுவதற்—கேர்பூக்கும்
பொற்பகமே மெய்ஞ்ஞான பூரணமே யாரணமே
கற்பகமே முன்னின்று கா.

## நூல்.

ஆசிரிய விருத்தம்.

ஆதியல் கம்துவில் லாகியென் றேதுபொரு
ளாகியெப் பொருளு மாகி
யரியதா யுரியதா யன்பர்கட் கேயுதவு
மானந்த மோன மாகிச்
சோதியா யாதிசற் சொரூபமாய் நிர்மல
சுகானந்த வாரி யாகிச்
சுபசோப சிங்கா சனாதிபதி யாய்த்திவ்ய
சோமயா னந்த மாகிப்

பேதக மிலாதசம் பூரண விலட்சண
பிர்மசற் சமய வித்வ
பிரபல சகாயபரி பாலன விதற்பர
பெட்புலவு நட்ப சதா
வேதநா யககபி பொருட்டினு லடிமைபவ
வேதனை யகற்று முதலே
விகசிதா னந்தபா ரகசியா னந்தசுக
மேவும் பரப்பிர் மமே. (1)

சருவபரி பூரண தயாளசாட் சாதியாய்ச்
சார்ந்தசற் குணமே ருவாய்த்
தாய்தமரி லாதவோர் சச்சிதா னந்தமாய்த்
தன்மயம தாகி யாவும்
மருவிமரு வா தநான் மறைமுடிப் பொருளாகி
மாயா விகார மாகி
மனோலயத் திற்போத மாகுமோங் காரசிம்
மாசன சவுக்ய பலித
கருதரிய வஸ்துவே மெய்ஞ்ஞான ரட்சகக்
கருணை ப்ரசாத வடிவே!
காரணா னந்தசுக வாரியின் மூழ்கியக்
கரையேற நாடு மென்றன்
வெருவுபவ பாசபந் தந்துணித் துதவியிவ்
வேளைவந் தருள்புரி குவாய்
விகசிதா னந்தபர ரகசியா னந்தசுக
மேவும் பரப்பிர் மமே. (2)

அறிவைப் படுத்திலே னெறியைத் தொடுத்திலே
    னாசார மென்ப தறியேன்
அனந்தனந் தாகம புராணகலை யோதுகினு
    மஞ்ஞான நீக்கு மறிவை
யறிகிலே னிரவுபக லாகமு வாசையா
    லறிவழிந் தலையு மெற்கும்
அஷ்டாங்க யோகநிலை கிட்டநீ யிஷ்டம்வைத்
    தானுநா ளெந்த நாளோ !
முறைமைதவ றூதநவ ரத்னஞா ஞேதயநன்
    முத்துமுழு வயிரமே யென்
முகநோக் கிடாதிருந் தாலடிமை யாரிடமு
    முறையிடுதல் நியாய மலவே
யிறைதீர் சதானந்த மோனப்ர சாதமே
    விநயாஞ் சிதசொ ரூப
விகசிதா னந்தபா ரகசியா னந்தசுக
    மேவும் பாப்பிர் மமே. (3)

184402

சாசுவத வானந்த ஞானபத யோகமே
    தற்பர எதார்த்த காணு !
சரியைவழி யொழுகிலேன் கிரியைநிலை தன்னையுஞ்
    சாதித்தி லேன்யோக மாந்
தேசுதட மறிகிலேன் ஞானமே யனுசரித்
    திடும்யூக மியாது மறியேன்
தேசிகா நடனமிடு வாசகா சாரமிகு
    சிற்பரா னந்த மயமே

பாசமுள் பஞ்சேந்த்ரி யங்களை வசஞ்செய்யும்
பாழான வென்ம னத்தைப்
பகுத்துணர் கிலேனுனது பத்மா சனத்தறிவு
பக்குவ மிலாத வெற்கு
வீசுமஞ் ஞானமிக வுளதா லு னருள்தந்து
மெய்ஞ்ஞான மூட்டு விப்பாய்
விகசிதா னந்தபர ரகசியா னந்தசுக
மேவும் பரப்பிர் மமே. (4)

நினதுவெளி யுருவினைத் தழுவியது கைப்படா
நேர்மையா னெஞ்ச முருகி
நீடுசுப சந்த்ரகாந் திக்கலைத் தமனிய
நிறைந்தபொற் பீட முற்ற
மனமெனும் பெண்ணினல் லாடனைப் பலவித
வணைந்து தனுப்பி வைத்தேன்
வந்ததோ வில்லையோ வென்றைய மேயுற்று
வாடுநின் னடிமை யேற்குத்
தனதுபா ராட்டிமா கனகசிம் மாசனத்
தகுதிதந் தருள்வை யென்று
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சாணுந்த கதிநம் பினேன்
வினவுபல சலனசஞ் சலமது தொலைத்தருளும்
வித்தகா ரத்ன சகித
விகசிதா னந்தபர ரகசியா னந்தசுக
மேவும் பரப்பிர் மமே. (5)

மண்மீ துதித்தியா னிதுகால மென்னசுக
வாழ்வடைந் தேன்கு ழந்தை
வயதிலே வந்ததுயர் மாறும லெப்பொழுதும்
மனத்திலே போராடவே
எண்ணு தெலாமெண்ணு மோர்பாவி யென்போலு
மெவருளா ரிவ்வுல கினில்
ஏகாந்த வெள்ளமே வேதாந்த ரூபமே
யின்பமெய்ஞ் ஞான முதலே
புண்யார்த்த மேவுசௌ பாக்கியம் மிருந்துதற்
போதனு னந்த முற்றுப்
புருடார்த்த மெய்தினின் புகழ்பாடி யின்பம்
பொருந்தவருள் புரிவை யன்றோ!
விண்மீ திருந்தமா மகவாரி யமிர்தமே
வெட்டவெளி யான மோன
விகசிதா னந்தபர ரகசியா னந்தசுக
மேவும் பரப்பிர மமே. (6)

வேதாந்த சாரத்தி னுட்பொருளை யோராது
வீணு டொலைத்து மேயான்
மெஞ்ஞான வின்பமனு காதபாழ் வீட்டையே
மெய்யென்று நம்பி நாளும்
நாதாந்த புவனத்தி லொட்டாத பிரபஞ்ச
நட்டாழி தன்னி லாழ்ந்து
நங்கையர்க ளனுமோச நமன்வலைக் காளாகி
நலிவதற் கென்செய்கு வேன்

சோதிப்ர காசமறை யாராயு மன்பர்தம்
தொல்லைக ளனைத்து நீக்கி
சுகநிஷ்டை யருணற் சுகானந்த மேயெனது
தொல்வினைக ளேர்ப்ப தரிதோ!
மீதுப்ர வாகமே யாவர்க்கு முத்திதரு
மேலான பத்ம ராக
விகசிதா னந்தபர ரகசியா னந்தசுக
மேவும் பரப்பிர் மமே. (7)

சொல்லுமெய்ஞ் ஞானச் சுகானந்த பொக்கிஷத்
தொளிர்மணிக் கொடியீ தெனுத்
தூயசதுர் வேதபோ தானந்த சாகர
சுயப்ரகா சத்தின் மேவும்
வல்லப துவக்கமுடி வற்றவுத் தண்டகுண
மதிமந்த்ர சந்த்ரோ தய
மௌனகுரு தேசிகா வாசாம கோசர
மனோன்மணிக் கருள்செய் தவா!
நில்லாது நிற்குமுன் பெருமையைச் சொல்லவு
நீசனென் னுற்கூடு மோ!
நிஷ்கள நிரஞ்சன நிராலம்ப நிர்த்தொந்த
நிமல வானந்த வடிவே
வெல்லாது வென்றமுன் வினையென்ற மாயையா
மிடிமைதீர்த் தருள்புரி குவாய்
விகசிதா னந்தபர ரகசியா னந்தசுக
மேவும் பரப்பிர் மமே. (8)

ஐயனே யகிலத் தனந்தா யிரம்பிறவி
யாகுமப் பிரவி தனிலே
யரிதுமா னுடமென்ப ரஃதடைந் தானுமதி
லானுதல் மிகவு மரிதே
செய்வினைப் பதமெனுஞ் சரியாதி நான்கிலெந்
தேசிகா நின்ப தத்தைத்
தேடுவது சரியைநற் றிருமுறைக ளோர்ந்துபின்
செய்தொழில் கிரியை யின்னும்
துய்யதல் லாவழியி லைம்புலப் போக்கிலாத்
துரியமாய் நிற்றல் யோகம்
சூட்சகா நின்னோடு கலந்தாங் கிரண்டற்ற
தூயநிலை ஞான மெனலால்
மெய்ஞ்ஞான யோகநித் திரைபுரிய வேமோக்க
வீடுதந் தருள்புரி குவாய்
விகசிதா னந்தபர ரகசியா னந்தசுக
மேவும் பரப்பிர் மமே. (9)

கஞ்சமல ரல்லிநீ லோற்பலங் கொட்டிசெங்
காந்தள்செறி புனல்வா வியுங்
கற்பகப் புன்னைபா திரிவன்னி சண்பகக்
கர்ச்சூர நிறைசோலை சூழ்
மஞ்சுக ளுலாவுகொடி மாடகூ டங்கள்சேர்
மாநகர்க் கண்மணி யெனு
மலர்மகளு மலைமகளு மருவிவிளை யாடிமதி
வளர்சோது குடியில் வாழுஞ்

செஞ்சொன்மீ ரான்கனிசெய் தவமதோர் வடிவதாய்த்
        திரள் அப்துல் காதி றென்னுஞ்
சேயனடி யேனுமுனை நம்பினேன் நம்பினேன்
        நிமைதீர்த் தாளு தற்கே
விஞ்சைசாக் தத்துரிய நிதமௌ னாகார
        வ்யோம யோகப் ரசாத
விகசிதா னந்தபர ரகசியா னந்தசுக
        மேவும் பரப்பிர மமே. (10)

முற்றுப்பெற்றது.

184402

184402

Printed at the Guardian Press, 156-B, Broadway, Madras—3-'26—1000.

18

# புத்தக விளம்பரம்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இளையாங்குடி யூனியன் சேர்மெனும், மதுரை தமிழ்ச் சங்க வித்துவானுமாகிய, சோதுகுடி ஸ்ரீமான், எம். கே. எம். அப்துல் காதிறு ராவுத்தர் சாஹிப் பஹதூர் அவர்களியற்றிய நாகூர் நாயகர் பஞ்சரத்நம் புத்தகம் 1-க்கு | 0 | 3 | 0 |
| டி ஆசிரியரவர்களியற்றிய, மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியம், நெல், கற்பு, ஈகை, பாம்பன் வழிநடைச் சிந்து. | (அச்சில்) | | |
| சென்னை ஆதியூநானி வைத்தியசாலையின் அதிபரான ஒ. எஸ். தாவுத் சாஹிபவர்களால் தொகுக்கப்பட்ட வைத்தியாமிர்தபோதினி புத்தகம் 1-க்கு | 1 | 0 | 0 |
| டியாராலியற்றிய நவநீத ஞானன் ஞானசுந்தரி யென்னும், நேபால் நாடக், நாடக் சுந்தர் சரித்திரம் காலிகோ பைண்ட் புத்தகம் 1-க்கு | 1 | 12 | 0 |
| மஹா துயரடைந்து சுகானந்தமெய்திய மாஹிஜாபின் சரித்திரம் புத்தகம் 1-க்கு | 0 | 10 | 0 |
| சகல வியாதிக்கும் ஒரேமருந்தென்னும் அனுபோக வைத்திய ஆநந்தக் களிப்பு புத்தகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| திருவீரமாநகர், பாலகவி வித்வரத்ன கே. எ. முஹம்மதிபுரூஹீம் புலவரவர்களாலியற்றிய தேசாபிமானிகளின் பேரில் பாடிய நற்றமிழ் நவீனம், ஆசிரியர் படத்துடன் புத்தகம் 1-க்கு | 0 | 6 | 0 |
| நற்றமிழ் நவீனம், இரண்டாம் பாகம் | (அச்சில்) | | |
| புதூர், அத்துவிதானந்தவனுபவ மெய்ஞ்ஞானசொரூபராகிய ஸ்ரீமத் பூ. மு. முஹம்மது மஸ்தானவர்களியற்றிய அருமையான தத்துவானந்த தீபம் புத்தகம் 1-க்கு | 0 | 5 | 0 |
| திருவீரமாநகர் செந்தமிழ் வித்துவான் யாஸீன் ராஸாவர்களாலியற்றிய, இந்தியா தேசாபிமானிகளின் பேரில் காந்தி மஞ்சரி புத்தகம் 1-க்கு | 0 | 2 | 0 |

எங்களிடம், சூக்குமதேகத்திற்குரிய, சகல மத வேதாந்தம், சித்தாந்தம், இதிகாசம், புராணங்கள், காவியங்கள், பக்திரசக் கீர்த்தனங்கள் முதலிய மக்கள் பெரும்பேற்றைத் தரத்தக்க அருமை பெருமைவாய்ந்த நூல்களும் விலை சரசமாகக் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்களை நன்கு கவனித்தனுப்புவோம். சுபம்.

பஞ்ச சக்தி புத்தகசாலை,
தபால் பெட்டி, நெ. 1051, இரங்கோன்.